**செய்தி வெளியீடு எண்: 024** **நாள்:10.05.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (10.5.2021) தலைமைச் செயலகத்தில், டி.வி.எஸ் மோட்டார் நிறுவனம், சுந்தரம்—கிளேட்டன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து, சீனிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை மூலமாக ரூபாய் 18 கோடி மதிப்பிலான 1600 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை (Oxygen Concentrators) தமிழக அரசுக்கு அளிக்கும் வகையில், முதல் கட்டமாக 7 கோடி ரூபாய் மதிப்பிலான 500 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை சீனிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை தலைவர் திரு. ஸ்வரன்சிங், இ.ஆ.ப (ஓய்வு) மற்றும் டி.வி.எஸ் மோட்டார் நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு. சேதுராமன் ஆகியோர் வழங்கினார்கள். சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட கோவிட்—19 நிவாரண பொருட்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தார்கள்.

இந்த ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மீதமுள்ள 1100 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் அடுத்த இரண்டு வாரங்களில் வழங்கப்படும்.

மேலும், சீனிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை 4 லட்சம் முகக்கவசங்கள் (Face Masks), 2 லட்சம் முகமூடிகள் (Face shields), 1 லட்சம் ஜோடி மருத்துவ கையுறைகள் (Sterile gloves) மற்றும் 1000 எண்ணிக்கையிலான பல்ஸ் ஆக்சிமீட்டர் (Pulse oximeter) உள்ளிட்ட அத்தியாவசிய மருத்துவ பொருட்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

அத்துடன் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு அடுத்த வாரத்தில் பிற அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்கப்படும்.

கொரோனா சிகிச்சைக்காக ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகளை ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்கான ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து சுய விருப்பத்தின் பேரில் ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் (Oxygen Concentrators) பெறப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக OLAM International மற்றும் TEMASEC Foundation என்ற பன்னாட்டு நிறுவனங்கள் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 300 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை (Oxygen Concentrators) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (10.5.2021) தலைமைச் செயலகத்தில், OLAM International பன்னாட்டு நிறுவனத்தின் சார்பில் 300 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை (Oxygen Concentrators) சிங்கப்பூர் நாட்டு தூதர் திரு. பாங் காக் டியான், முதன்மைச் செயலர் திரு. ஜான் சியோ, சிங்கப்பூர் தூதரகத்தின் துணைத் தூதர் திரு. ஆபிரகாம் டான், OLAM International

பன்னாட்டு நிறுவனத்தின் முதன்மை தொழில்நுட்ப அலுவலர் திரு. தியாகராஜன் மணிகண்டன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

*******